பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 07 2024 **THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமரை விமர்சிக்க எதிர்க்கட்சிகள் பயன்படுத்தும் வார்த்தைகள் கவலையளிப்பதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

2. குடியரசுத் தலைவரின் உரைத் தொகுப்புநூல் எதிர்கால சந்ததியினருக்கான அறிவுக் களஞ்சியமாக திகழும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. சண்டிகர் - திப்ருகர் விரைவு ரயில், உத்தரப்பிரதேசத்தில் தடம் புரண்ட விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர், 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

4. பங்களாதேஷில் நடைபெற்றுவரும் வன்முறை சம்பவங்களை அடுத்து, அங்குள்ள இந்தியர்கள் தேவையின்றி வெளியே செல்ல வேண்டாம் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

5. இங்கிலாந்தில் நடைபெறும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியை எதிர்க்கட்சிகள் விமர்சிக்கும் வார்த்தைகளின் தன்மை கவலையளிக்கக் கூடியது என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுவாழ்வில் இருப்பவர்கள் முறையான வார்த்தைகளை தேர்வு செய்து பேசுவது மிகவும் முக்கியம் என்று கூறினார்.

அரசியல் வாழ்வில் கண்ணியத்தை கடைபிடிப்பதுடன், பயன்படுத்தக்கூடாத வார்த்தைகளை தவிர்க்க வேண்டும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தினார்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி, சில அரசியல் கட்சிகள் தங்களின் குறுகியகால சுய லாபத்திற்காக பயன்படுத்தும் வார்த்தைகள் துரதிருஷ்டவசமானது என்று கூறினார்.

<<<<<<>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வின் உரைகள் அடங்கிய நூல், எதிர்கால சந்ததியினருக்கான அறிவுக் களஞ்சியமாக திகழும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் ஓராண்டில் ஆற்றிய உரைகளை உள்ளடக்கிய தனித்துவமிக்க புத்தகத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.

இதனை, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், அத்துறையின் செயலாளர் திரு சஞ்ஜய் ஜாஜூ ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திரு எல். முருகன், குடியரசுத் தலைவரின் எண்ணங்களை பிரதிபலிக்கக் கூடிய நம்பகமான தொகுப்பாகும் இது என்று கூறினார்.

முன்னதாக, நூலை வெளியிட்டு பேசிய மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், இந்த தொகுப்பு நமது ஜனநாயகத்திற்கும், ஒட்டுமொத்த சமூகத்திற்கும் கிடைத்த களஞ்சியமாகும் என்று கூறினார்.

பெண்கள், பட்டியலினத்தை சேர்ந்தோர், விவசாயிகள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரிடத்திலும் குடியரசுத் தலைவர் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாட்டை உணர்த்துவதாக இந்த தொகுப்பு அமைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்தின் **Gonda** மாவட்டத்தில் சண்டிகர் - திப்ருகர் விரைவு ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 2 பேர் உயிரிழந்தனர், 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இன்று பிற்பகலில் நேரிட்ட இந்த விபத்தில் ஐந்து முதல், ஆறு பெட்டிகள் தடம் புரண்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

40 பேர் கொண்ட மருத்துவக்குழுவும், 15 ஆம்புலன்ஸுகளும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

இந்த ரயில் விபத்தையடுத்து, அந்த வழித்தடத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்த தகவல்களை 8 9 5 7 4 – 0 9 2 9 2 மற்றும் 8 9 5 7 4 - 0 0 9 6 5 என்ற எண்களில் தொடர்புகொண்டு தகவல்களை அறிந்துகொள்ளலாம் என ரயில்வே அறிவித்துள்ளது.

மீட்புப்பணிகளை விரைந்து முடிக்குமாறு முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிதயுதவி வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.

இந்த விபத்து குறித்து உயர்நிலைகுழு விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

கேலோ இந்தியா திறன் அடையாளம் கண்டறியும் மத்திய அரசின் இரண்டாம் கட்ட திட்டத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா நாளை தொடங்கிவைக்கிறார்.

நவீன காலத்திற்கு ஏற்ப உலக அளவில் விளையாட்டு வீரர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில், கேலோ இந்தியா திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

உலகின் மிகப்பெரிய ஐந்து நிலக்கரி சுரங்கங்களில் இரண்டு சுரங்கங்கள் இந்தியாவில் உள்ளதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள **Coal** இந்தியா நிறுவனத்தின் துணை நிறுவனமான **South Eastern Coal Field** நிறுவனத்தின் ஜெவ்ரா மற்றும் குஸ்முந்தா சுரங்கங்கள் உலகின் 10 பெரிய நிலக்கரி சுரங்கங்கள் பட்டியலில் இரண்டு மற்றும் நான்காவது இடத்தை பிடித்துள்ளன.

இந்த இரண்டு சுரங்கங்களின் மூலம் ஆண்டுக்கு 100 மில்லியன் டன் அளவிலான நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகிறது.

இது நாட்டின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் பத்து சதவீதம் என்று நிலக்கரி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான நீட் தேர்வு முடிவுகளை நகரங்கள் மற்றும் தேர்வு மையங்கள் வாரியாக நாளை மறுநாள் பிற்பகலுக்குள் இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்று தேசிய தேர்வு முகமைக்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீட் முறைகேடு புகார் தொடர்பான மனுக்களை விசாரணை செய்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட், நீதிபதிகள் திரு **Pardiwala,** திரு மனோஜ் மிஸ்ரா அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

மாணவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தாமல், முடிவுகளை வெளியிட வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதையடுத்து, இவ்வழக்கின் விசாரணை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் ஐந்தாம் தேதி நடைபெற்ற நீட் தேர்வை நாடு முழுவதும் 23 லட்சம் மாணவர்கள் எழுதினர்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் சுகாதார கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்த அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திரு அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லி மருத்துவமனைகளில் புதிய வசதிகளை தொடங்கிவைத்த பின்னர் எமது செய்தியாளரிடம் அவர் பேசினார்.

மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு அபூர்வ சந்திரா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பங்களாதேஷில் நடைபெறும் வன்முறை - மோதல் சம்பங்களைத் தொடர்ந்து அங்கு வசிக்கும் இந்தியர்கள் இருப்பிடத்தை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்கா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அரசின் வேலைவாய்ப்பு இடஒதுக்கீடு அறிவிப்பை எதிர்த்து மாணவர்கள் உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காவல்துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் நான்கு பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.

தங்களின் கோரிக்கையை வலியுறுத்தி, ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடு தழுவிய அளவில் முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனால், போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இடஒதுக்கீடு தொடர்பாக பேச்சு நடத்த தயாராக உள்ளதாக பங்களாதேஷின் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு **Anisul Huq** தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

காஸா பகுதியில் உடனடியாக முழுமையான சண்டை நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐ நா-வில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

மேற்காசியாவுக்கான ஐ நா பாதுகாப்பு கவுன்சில் விவாதத்தின்போது பேசிய இந்தியாவுக்கான துணை பிரதிநிதி திரு ஆர் ரவீந்திரா, போரை தொடர்ந்து பிடித்து வைக்கப்பட்டுள்ள பிணைக் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி விடுவிக்க வேண்டும் என்று கூறினார்.

கடந்த பல ஆண்டுகளாக பாலஸ்தீனத்தின் மேம்பாட்டிற்காக இந்தியா 120 மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உதவி வழங்கியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

ஆந்திரப்பிரதேசத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் தெலங்கானாவில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் நாளை முதல் இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்யும் என்றும், கொங்கன் மற்றும் கோவா பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

தெற்கு உள் கர்நாடகம், குஜராத், மகாராஷ்ட்ரா ஆகிய மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 4-6, 6-0 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Amelia Rajecki** –ஐ வென்றார்.

-------------

**Swiss** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட் கணக்கில், யுக்ரைனின் **Denys Molchanov** – நெதர்லாந்தின் **Matwe Middelkoop** இணையை வென்றது.

-------------------

15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 14 பதக்கங்களை வென்றுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் முதல் இரண்டு நாட்களில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியுள்ளது.

மகளிர் பிரிவில் ஐந்து தங்கம், நான்கு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கமும், ஆடவர் பிரிவில் 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கமும் இந்தியாவுக்கு கிடைத்தது.

**<<<<<<END>>>>>**